**செய்தி வெளியீடு எண் :1542** **நாள் : 02.08.2023**

# செய்தி வெளியீடு

**சுதந்திர தின விழாவை முன்னிட்டு தலைமைச் செயலகத்தில் தேசிய கொடி கம்பம் புதுப்பிக்கப்பட்டு வரும் பணிகளை, மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள், ஆய்வு செய்தார்கள்.**

---

தலைமைச் செயலகத்தில், இன்று (2.8.2023) "தேசிய கொடி கம்பம்" புதுப்பிக்கப்பட்டு வரும் பணிகளை, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள், பொதுப்பணித்துறை அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்கள். இவ்வாய்வின்போது, தேசிய கொடிமரத்தினை புதுப்பித்தல் பணி ரூ.45.00 இலட்சம் மதிப்பீட்டிலும், கொடிமர நடைமேடை & பிணைகயிறு புதுப்பித்தல் பணி ரூ.30 இலட்சம் மதிப்பீட்டிலும், கோட்டை கொத்தளத்தின் கூரை மராமத்துப்பணி ரூ.15 இலட்சம் மதிப்பீட்டிலும் நடைபெற்று வருவதாகத் தெரிவித்தார்கள்.

**<u>கொடிமரத்தின் விவரம்</u>**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின், தீவிர முயற்சியால், 1974 முதல் மாநில முதல்வர்கள் சுதந்திர தினத்தன்று தேசிய கொடியேற்றலாம் என்ற உரிமை பெறப்பட்டது. 1687–1692 வரை, சென்னை மாகாண ஆங்கிலே ஆளுநராக இருந்த 'யேல்' அவர்களின் காலகட்டத்தில் 150 அடி மரத்திலான கொடி கம்பம் நிறுவப்பட்டது. மரக்கம்பம் பழுதடைந்ததால், 1994ல் 119 அடி உயர இரும்பிலான கொடி கம்பம் L & T நிறுவனம் மூலம் நிறுவப்பட்டது. கோட்டை கொத்தளத்தின் பீடத்திற்குமேல், கொடி கம்பம் 3 அடுக்குகளாக அமைக்கப்பட்டுள்ளது.

**கொடி கம்பம் முதல் அடுக்கு,** 69 அடி உயரம், 20 அங்குல இரும்பு குழாயால் அமைக்கப்பட்டுள்ளது மற்றும் 10 அடி விட்டமுள்ள இரும்பு தகடு நடைமேடை உள்ளது. **கொடி கம்பம் இரண்டாம் அடுக்கு,** 30 அடி உயரம், 12 அங்குல இரும்பு குழாயால் அமைக்கப்பட்டுள்ளது மற்றும் 5 அடி விட்டமுள்ள இரும்பு தகடு நடைமேடை உள்ளது. **கொடி கம்பம் மூன்றாம் அடுக்கு,** 20 அடி உயரம், 6 அங்குல இரும்பு குழாயால் அமைக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின்போது, பொதுப்பணித்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் B.சந்திரமோகன் இ.ஆ.ப., முதன்மைத் தலைமைப் பொறியாளர் திரு.சத்தியமூர்த்தி, கண்காணிப்புப் பொறியாளர் திருமதி. மேனகா, செயற்பொறியாளர் திரு.குழந்தையன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in